# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 12 29–05–1992 (மே. 29 — யூன் 12) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### பங்குச் செய்திகள்

எமது பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக உங்கள் ஊர்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை எழுதி அனுப்புங்கள். பங்குச் செய்திகள் பங்குத் தந்தையரின் கையொப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும். புகைப்படங்கள் அனுப்பினால் அவையும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

# யாழ் அ. ம. தி. களின் மீளாய்வு மாநாடு

# மே12-18 நாள்களில் நடைபெற்ற ஆய்வுகள்

**❋ "அமலமரித்தியாகிகள் தங்கள் சபையின் எதிர்காலத்தை நோக்குங்கால், தம் பழைய உருவைக் களைந்து ஒரு புதிய உருவைத் தேட வேண்டிய நேரம் வந்து விட்டது. இன்று யாழ்., மன்னார் மறைவட்டத் திருச்சபைகள் வளர்ந்து முதிர்ச்சியடைந்துள்ள நிலையில் இருப்பதால், அமதிகள் மறைவட்ட அமைப்புகளை விட்டு விலகி நின்று தமக்கென ஓர் உருவை அமைத்துக் கொள்வதன் வழியாக, தமது சபையை இம்மாநிலத்தில் மீளத் தாபிக்க வேண்டியுள்ளது".**

**❋ அமதிகள் தம் வாழ்வு, பணி பற்றி விரிவாக ஆராய்ந்து எதிர்வரும் ஆண்டுகளில் அவை அமைய இருக்கும் வடிவை தம் 'பணி-பார்வை- கூற்று" (Mision - Vision - Statement) ஆக வெளியிட்டனர்.**

யாழ். அமதிகளின் முதல் மாநாடு வைத்தியசாலை வீதியிலுள்ள தொடர்பகத்தில் வைகாசித் திங்கள் 12ஆம் நாளிலிருந்து 18ஆம் நாள் வரை நடைபெற்று இனிதே நிறைவெய்தியது. இம்மாநாட்டுக்காக அமதிகள் கடந்தமூன்று ஆண்டுகளாக அயராது உழைத்து, ஆயத்தம் செய்தனர். தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கும் போர்க்கால சூழ்நிலையினாலும் அவ்வப்போது நடைபெற்ற அசம்பாவிதங்களினாலும் பல தடவைகள் பின்போடப்பட்டு வந்த மாநாடு, சென்ற வாரம் நடந்து முற்றுப்பெற்றது.

இதற்கு உடன் ஆயத்தமாக யாழ். அமதிகள் பண்டத்தரிப்புத் தியான இல்லத்தில் மூன்று நாட்கள் செபத்திலும், தியானத்திலும் பங்கெடுத்தனர். இஞ் ஞான ஒடுக்கம் அமதிகளின் ஆசிய அவுஸ்திரேலியப் பிராந்திய ஆலோசகர் அருட்திரு. டெஸ் ஓ டொனல் அடிகளாரால் நெறிப்படுத்தப்பட்டது.

மாநாடு ஆரம்ப நாளில் (12ஆம் திகதி) தொடக்க நிகழ்ச்சியாக இடம்பெற்ற செபவழிபாட்டில் யாழ் அமதிகள் பணிபுரியும் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் திருமலை-மட்டுநகர் ஆயர்கள் பங்கேற்று, மங்கல விளக்கேற்றி மாநாட்டை ஆரம்பித்து வைத்தனர். இலங்கையில் பணிபுரி

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## வடசீனாவில் தென்கொரிய குழு

கொரிய இன மக்களுக்குப் பணிபுரிவதற்காக 1942 இல் வடசீனாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒரு குருவானவர் இன்னும் அங்கு இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அவர் சீனா தேசிய திருச்சபையுடன் இணையாது தனிப்பட்ட முறையில் அங்கு பணியாற்றி வந்துள்ளார். 82 வயதான பிதா இம் பொங் மான் தற்போது சுகவீனமுற்ற, நிலையில் தாய்நாடு திரும்ப விரும்புகிறாரென்று அறியப்படுகிறது.

பிதா இம் மஞ்சூரியாவுக்கு அனுப்பப்பட்ட போது கொரியா ஜப்பானியர் ஆட்சியில் இருந்தது. சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்ட போது பிதா இம் பல ஆண்டுகள் சிறையிலிடப்பட்ட பின் ஒரு தொழில் முகாமுக்கு அனுப்பப்பட்டார். 1960இல் இதயநோய் காரணமாக சிகிச்சை பெற ஹார்பின் நகருக்குப் போக அவர் அனுமதிக்கப்பட்டார். அவர் முகாமுக்குத் திரும்பாமல் ஹார்பின் நகரிலுள்ள கத்தோலிக்கரோடு வாழ்ந்து, மறைப் பணி புரிந்து வந்தார். 1986-ல் அவர் ஷூலன் என்னுமிடத்துக்குச் சென்றார். அங்கு ஒரு கத்தோலிக்க குடும்பத்தவரோடு வாழ்ந்து வந்தார். அக்குடும்பத்தைச் சேர்ந்த இருவர் சென்ற ஆண்டில் கொரியாவுக்கு வந்த போது தான் பிதா இம் பற்றிய விபரங்கள் தெரிய வந்தன.

## எயிட்ஸை தடுக்க வேதாகமத்தின்படி நடவுங்கள்

எயிட்ஸ் நோயிலிருந்து தப்புவதற்கு வேதாகமம் காட்டும் ஒழுக்க நெறியைப் பின்பற்றுவதே சிறந்த வழியென இந்து மத வைத்தியரொருவர் கூறியுள்ளார்.

கல்கத்தா நகரில் கிறிஸ்தவ குழுக்களுக்கும், சமூக சேவையாளருக்கும் எயிட்ஸ் தடுப்பு பற்றி நடைபெற்ற பட்டறையொன்றில் விவேகானந்த சர்வதேச சுகாதார நிலையத்தின் செயலாளரான டாக்டர் அபானிந்திர நாக் என்பவரே மேற்கண்டவாறு கூறினார். ஒருவருடன் மட்டுமே பாலுறவு வைத்துக் கொள்ளவேண்டும் என்ற வேதாகம நெறி உலக சுகாதார நிறுவனத்தின் கருத்தை ஒத்துள்ளதை அவர் எடுத்துக் காட்டினார்.

மேற்கு வங்காளம் எயிட்ஸ் நோய் பரவுவதற்கான ஆபத்தில் இருப்பதாக கருதப்படுகிறது. கல்கத்தாவில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 161,000 பேரில் 32 வீதமானோர் எயிட்ஸ் வைரஸின் காவிகளாக இருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

ஏனைய நோயாளிகளைப் போலவே இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் அன்பும், ஆதரவும் தேவை என்று சஞ்சால் பிஸ்வாஸ் என்பவர் கூறினார்.

## பிரச்சினைகளை எதிர்நோக்கும் புதிய மறைமாவட்டம்

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கம்மம் மறைமாவட்டம் பல பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட இம் மறைமாவட்டம் மூன்று ஆண்டுகளாக ஆயரின்றி இருந்துள்ளது. அங்குள்ள 80,000 கத்தோலிக்கருக்கு பணி செய்ய 30 குருக்களே உள்ளனர். இக் குருக்கள் பல்வேறு காரணங்களால் மனஞ்சோர்ந்துள்ளனர் என்று புதிய ஆயரான ஜோஜி மாரம்பூதி அவர்கள் கூறியுள்ளார். குருக்கள் தன்னோடு சேர்ந்து குழுவாக இயங்குவதன் மூலமும் பொது நிலைத் தொண்டர்களை பயிற்றுவிப்பதன் மூலமும் ஆட்பலக் குறைபாட்டை ஓரளவு நிவர்த்தி செய்யலாமென அவர் கருதுகிறார்.

கம்மம் மறைமாவட்டம் வளம் குறைந்தது. மழை

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

### நன்றி நவிலல்

எனது குருத்துவத்தின் 50 ஆண்டுகள் நிறைவு விழாவுக்கும், எனது வாழ்வின் 75 ஆண்டுகள் நிறைவு விழாவுக்கும். எனது ஆயர் பணியின் 25 ஆண்டுகள் நிறைவு விழாவுக்கும் எனக்கு நல்வாழ்த்துக்கள் கூறி, எனக்காக இறைவனை வேண்டுவதாக எனக்குச் செய்தி அனுப்பிய அனைவருக்கும் எனது அன்பு நிறை நன்றியைத் தெரிவித்து உங்கள் எல்லோருக்காகவும் மன்றாடினேன் என்பதையும் அறியத்தர விரும்புகிறேன்.

+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்

## ஹொங்கொங் மறைவட்ட தொழில் நிலையம்

ஹொங்கொங் கத்தோலிக்க தொழில் ஆணைக்குழு தொழிலாளருக்கென ஓர் மேய்ப்புப் பணி நிலையத்தை நிறுவ இருக்கின்றது. தொழிலாளரோடு நேரடித் தொடர்பு கொள்ள இந்நிலையம் துணை புரியுமென தொழிலாளர் குழுவின் தலைவரான பிதா டொமினிக் சான் சிமிங் கூறியுள்ளார்.

இந்த நிலையம் கத்தோலிக்க தொழில் விவகார ஆணைக் குழுவினால் நடத்தப்படவிருக்கின்றது. அது தொழிலாளருக்கு ஆன்மீக, சமய சம்பந்தமான உதவிகளை அளித்து, குழுக்களின் மூலம் நட்பை வளர்க்கவும் துணைபுரிவதோடு நற்செய்திப்பணிக்கும் ஏற்ற ஒரு தளமாக விளங்கும்.

தொழில் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பேசிய மறைமாவட்ட முதல்வர் சமுதாயத்தில் திருச்சபையின் தீர்க்கதரிசனப் பணியை நிறைவேற்றும் முகமாக தொழிலாளர் குழுக்களுக்கு ஆதரவு அளிக்கும்படி கத்தோலிக்க மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ஹொங்கொங்கில் பல தொழிலாளர் குழுக்கள் இயங்கி வருகின்றன. இத் தொழிலாளர் நிலையத்தை அமைப்பதற்காக தொழிற்சாலைகளுக்கு அண்மையிலுள்ள ஒரு நிலம் மறைமாவட்ட அதிகாரிகளால் 385 ஆயிரம் அமெரிக்கா டொலர்களுக்கு வாங்கப்பட்டது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# இலை மறை காய்கள்

இம்மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை மாலை நாட்டுக்கூத்துக் கலாநிதி ம. யோசேப்பு அவர்கள் மறைந்த பத்தாவது ஆண்டு நினைவு நாளைச் சிறப்பித்து யாழ். ஆசனக் கோவில் முன்றலில் விழா எடுக்கப்பட்டது. இவ்விழாவில் உரையாற்றிய பல பெரியார்களும் இவர் நாட்டுக்கூத்துக் கலைக்கும், அதன்வழி மறைக்கும் ஆற்றிய பணியைப் புகழ்ந்து பேசினார்கள். இந்நாளில் இவருடைய சீடர்கள் இணைந்து 'குருசரணம்' என்ற மலரையும் வெளியிட்டார்கள். இதற்கு யாழ் ஆயர் கொடுத்த ஆசிச் செய்தியில் இவரது ஐம்பெரும் பணிகளைப் புகழ்ந்து பேசியுள்ளார். பேராலயப் பங்குத்தந்தையும் தமது ஆசிச் செய்தியில் புனிதர்களின் சரிதைகளை நாட்டுக் கூத்துகளாக மேடையேற்றி சமயக்கலையும், பசாம் வாசிப்பதில் முன்னோடியாக விளங்கிப் பங்குப்பணியும் புரிந்தார் என வாழ்த்தியுள்ளார். தமது குருவின் பாணியிலே 'எஸ்தாக்கி' நாட்டுக்கூத்தையும் அவரின் சீடர்கள் மேடையேற்றினார்கள்.

மேற்படி விழாவின் பின்னணியிலே இலைமறைகாயான கருத்து ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடான 'இன்றைய உலகில் திருச்சபை'யானது பொதுநிலையினரின் மறைப்பணியை ஊக்குவிக்கக் கோரிநிற்கின்றது. இக் கண்ணோட்டத்தில் எம்மத்தியில் இன்றைய காலகட்டங்களில் மறைப்பணியாற்றிவருவதில் பொதுநிலையினரும் பங்கேற்றுள்ளனர். இவ்வரிசையில் இலைமறைகாயாக திரு. ம. யோசேப்பு அவர்களும் பணிபுரிந்தார் என்பதே எமது கருத்தாகும். அதாவது இவர் தாம்பெற்ற கலைச்செல்வம் ஆகிய நாட்டுக்கூத்தின் ஊடாக மறைச் செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் மறையாசிரியனாகப் பணிபுரிந்துள்ளார்.

இவரது நாட்டுக் கூத்துக்களில் பெரும்பான்மையானவை கிறிஸ்தவ படிப்பினைகளை உள்ளடக்கியதாகவும், புனிதர்களின் சரிதையைக் கருப்பொருளாகக் கொண்டனவாகவும் இருந்தன. இவ்வகையான நாட்டுக் கூத்துக்களை ஊர்தோறும் சாதாரண மக்களிடையே பரப்பியபோது இவரது பணி மறையாசிரியப்பணியை ஒத்ததாக இருந்தது எனலாம். அதாவது புனிதர்களின் சரிதைகளையும், கிறிஸ்தவ படிப்பினைகளையும் நாட்டுக் கூத்துப் பாடல்களாக்கி பாமரமக்கள் மனனம் செய்து பாடக்கூடிய வகையில் திருச்சபைப் படிப்பினையை மெருகூட்டிப் படிப்பித்திருக்கிறார். எமது பழமைவாய்ந்த கலைகள், கலாசாரங்கள், நவீன உலகின் தொடர்புசாதன வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தி எமது மறைச் செய்தியை எடுத்துச் சொல்ல வேண்டியதே இன்றைய மறைபரப்புப் பணியின் தேவையாக இருக்கிறது. எனவே இத்தேவையை ஒவ்வொரு பொது நிலையினரும் உணர வேண்டும். பெரிய எடுப்பில் அதனைச் செய்யாவிடினும் தம்மிடம் உள்ள ஆற்றல்கள், திறமைகள் மூலம் இறைவனின் வார்த்தையைப் பறை சாற்றுபவர்களாக மாறவேண்டும். அத்துடன் இப்பணியில் இலைமறைகாய்களாக ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரையும் நாம் இனங்கண்டு அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டும்.

இறந்தபின் பாராட்டுவதைவிட இருக்கும்போதே பாராட்டினால் அதிக பலனைப் பெறலாம். இதன் அடிப்படையில் நாட்டுக்கூத்துக்கலாநிதி ம. யோசேப்பு அவர்களுக்கு யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இருக்கும்போதே பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது பாராட்டத் தக்கதே. அவர் வழிநின்று நாமும் எம்மத்தியில் இலைமறைகாய்களாக தமது கலை ஆர்வத்தால் தூண்டப்பெற்று மறைப்பணி ஆற்றி வருபவர்களின் பணியைப் பாராட்ட வேண்டும்.

### 26வது உலக தொடர்புசாதன தினம் - திருத்தந்தையின் செய்தி

# கிறிஸ்துவின் நற்செய்தியை தொடர்புசாதனங்களில் அறிவித்தல்

( 1992 மே 31 ஞாயிற்றுக்கிழமை )

அன்புச் சகோதரரே,

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அறிவுரைக்கமைய, திருச்சபையானது இருபத்தாறு ஆண்டுகளாக சமூக தொடர்பு சாதனங்கள் தினத்தைத் தொடர்ந்து கொண்டாடி வருகிறது.

இந்நாளில் கொண்டாடப்படுவதென்ன? இது இறைவனது ஒரு குறிப்பிட்ட கொடையை, மனித வரலாற்றில் நாம் வாழும் இக்காலகட்டத்தில் மிகுந்த முக்கியத்துவமுடைய ஒரு கொடையை, மனிதருக்கிடையில் தொடர்புகளை இலகுவாக்கி,மேம்படுத்தி, வளம் செய்து வரும் சகல தொழில் நுட்ப சாதனங்கள் என்னும் கொடையை நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்பதை காட்டும் ஒரு வழியாகும்.

இத்தினத்தன்று நாம் பேச்சு, பார்வை, கேள்வி என்னும் கொடைகளைப் போற்றுகின்றோம். ஏனெனில் தனிமையிலிருந்தும், ஒதுக்கநிலையிலிருந்தும் மீளவும், எமது உள்ளங்களில் எழும் எண்ணங்கள் உணர்வுகளை எம்மைச் சூழ உள்ளவர்களுடன் பரிமாறிக் கொள்ளவும் அவை வழிசெய்கின்றன. எமது முன்னோரின் ஞானத்தை எமக்குக் கிடைக்கச் செய்வதும், எமது சொந்த அனுபவங்களையும் சிந்தனைகளையும் எமக்குப் பின்வரும் சந்ததியினருக்கு, வழங்குவதுமான எழுத்து, வாசகம் என்னும் கொடைகளைப் போற்றுகின்றோம். பின்பு, இந்த அதிசயங்களெல்லாம் அற்பமானவை என்பதுபோல், இன்னும் வியத்தகு அற்புதங்களின் பெரும்பயனை நாம் காணக்கூடியதாயுள்ளது. மனிதன் தன் நுண்ணறிவினால் இத்தொழில்துறை விஞ்ஞான அற்புதங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென இறைவன் முன்கூட்டியே ஏற்பாடுசெய்துள்ளார். எமது காலத்தில் இந்தக் கண்டு பிடிப்புகள் பெருமளவில் அதிகரித்து எமது தொடர்புகளைக் கொண்டு செல்லக் கூடிய எல்லைகளை விரிவு படுத்தி, ஒரே வேளையில் எண்ணற்ற மக்களுக்கு எட்டும்படி செய்துள்ளன.

தொடர்பு சாதனங்கள் — எமது விழாவில் அவற்றுள் எவற்றையும் நாம் விட்டுவிடவில்லை — சிந்தனைகள் வார்த்தைகளாக பகிரங்கமாக வெளியிடப்படும் நவீன சந்தைக்கு ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் அனுமதிக்கும் புகவுச்சீட்டாகும். அங்குதான் கருத்துகள் பரிமாறப்படுகின்றன, செய்தி பரப்பப்படுகிறது. சகல விதமான தகவல்களும் அனுப்பப்படுகின்றன, பெறப்படுகின்றன (மீட்பரின்பணி 37) இவை அனைத்திற்காகவும் எமது பரலோக தந்தையைப் போற்றுகின்றோம். ஏனெனில் ஒவ்வொரு நன்மையும் ஒவ்வொரு பூரணகொடையும் அவரிடமிருந்தே வருகின்றன.

நாம் எடுக்கும் இந்த விழா இயல்பாகவே மகிழ்ச்சியும் நன்றிப்பெருக்கும் உள்ளதாக இருப்பினும் துக்கத்தினதும் வருத்தத்தினதும் சாயல் அதன் மீது படிந்திருப்பதும் அவசியமாயிருக்கின்றது. நான் இன்று விழாவெடுக்கும் அதே தொடர்பு சாதனங்களின் வழியாக, எமது மனிதப் பண்புகளின் குறைபாடுகளும், தனிநபர்களிலும், சமுதாயத்திலும் பிரசன்னமாயிருக்கும் தீமைகளும், எத்தனையோ சாட்டுகளின் பேரில் மனிதர் ஒருவர் மீது ஒருவர் கட்டவிழ்த்துவிடும் அர்த்தமற்ற வன்முறையும் அநீதியும் இடையறாது எமக்கு நினைவூட்டப்படுகின்றன. உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் கொடுமைகளுக்குக் காரணம் கடந்த காலத்துப் போட்டிகளாகவோ, இனத்துவேஷங்களாகவோ, பழிவாங்கும் நோக்கமாகவோ, அதிகார மோகமாகவோ, பொருள் தேடும் அவாவாகவோ, தன்னலமாகவோ, மனித உயிரின் மட்டிலும் மனித உரிமைகள் மட்டிலும் மதிப்பின்மையாகவோ இருக்கலாம். தொடர்பு சாதனங்கள் மூலம் நாம் அநேக தடவைகளில் இவற்றை தடுக்க வகையின்றி வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களாக இருக்கின்றோம். கிறிஸ்தவர்கள் இந்நிகழ்ச்சிகளையும் செயல் நோக்கங்களையும் கண்டு வருத்த முறுகின்றனர். ஆனால் அவர்கள் இதில் இன்னும் எவ்வளவோ செய்யுமாறு அழைக்கப்படுகின்றனர். அவர்கள் நன்மையைக் கொண்டு தீமையை மேற்கொள்ள முயலவேண்டும்.

( ரோமர் 12 : 21 )

தீமைக்கு கிறிஸ்தவன் விடுக்கும் மறுமொழி என்னவென்றால், எல்லாவற்றுக்கும் மேலாக நற்செய்தியைச் செவிமடுத்து, கிறிஸ்துவில் மீட்பு என்னும் இறைவனின் செய்தியை மேலும் பிரசன்னப்படுத்துவதாகும். கிறிஸ்தவர்களிடம் அறிவிக்க வேண்டிய "நற்செய்தி" ஒன்று உண்டு. எம்மிடம் கிறிஸ்துவின் செய்தி உண்டு— அதனைக் கேட்க ஆயத்தமாயிருக்கும் ஒவ்வொருவருடனும் பகிர்ந்து கொள்வதே எமது மகிழ்ச்சி.

முதன்முதலாக அதனை எமது வாழ்க்கைச் சான்றின் மூலம் அறிவிக்கின்றோம். ஏனெனில் திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் ஞானத்துடன் கூறியதுபோல், "நவீன மனிதன் போதகர்களைவிட சாட்சிகள் கூறுவதை விரும்பிக் கேட்கிறான். அவன் போதகர்கள் கூறுவதைக் கேட்கிறானென்றால் அது அவர்கள் சாட்சிகளாக இருப்பதனால்தான். மலைமீதுள்ள நகரைப் போலவும், தண்டின்மீது வைக்கப்பட்ட விளக்கைப் போலவும் எல்லோரும் காணக்கூடியதாக அமைதியான ஒரு துறைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கத்தைப் போல எமது ஒளி பிரகாசிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. (மத். 5 : 13 – 14)

எமது தனிப்பட்ட வாழ்வும் சமூக வாழ்வும், கிறிஸ்தவர்கள் என்றமட்டில் நாம் கொண்டிருக்கும் கொள்கைகளையும், மதிப்பீடுகளையும் பிரதிபலிப்பதாக இருந்தால்,இந்த உண்மையானது, உள்ளதை உள்ளவாறே எடுத்துக்காட்டும் தொடர்புச்சாதனங்களால் உலகின் கவனத்துக்குக் கொண்டு வரப்படாமலிருக்க முடியாது. கிறிஸ்துவின் செய்தி இவ்வாறு அறிவிக்கப்படுவது ஏற்கெனவே பெரும் நன்மை செய்யக்கூடியதாயிருக்கும். திருச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இவ்வாறு சான்று பகர்ந்தால் அது எவ்வளவு பலன் தரத்தக்கதாயிருக்கும்!

ஆனால், கிறிஸ்துவின் சீடர்களிடமிருந்து இன்னும் திட்டவட்டமானதோர் அறிவிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வித அச்சமோ இளக்காரமோ இன்றி "பகல்நேர ஒளியிலும்" "கூரை மீதிருந்தும்" (மத். 10 : 27. லூக். 12 : 3) எமது விசுவாசக் கொள்கைகளை அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். தெய்வீகச் செய்தியை, இயல்பாகவே மக்களின் பேச்சு வழக்கிற்கும் அவர்களின் சிந்தனைப் பாங்கிற்கும் பொருத்தமான முறையில் தழுவியமைத்து. எமது நம்பிக்கைகளைப் பொறுத்தமட்டில் அவர்களிடமிருந்து எத்தகைய உணர்வு நுட்பத்தை எதிர்பார்க்கிறோமோ, அதே உணர்வு நுட்பத்தை அவர்கள் கைக்கொண்டிருக்கும் நம்பிக்கைகளில் மட்டில் நாம் எப்போதும் காட்டி வரவேண்டும், ஆனால் திருச்சபை வற்புறுத்துவதற்கமைய இந்த அறிவித்தல் இருவகையான மதிப்புகளுடன் செய்யப்படவேண்டும் — அதாவது தமது வாழ்வின் ஆழ்ந்த வினாக்களுக்கு விடை காணும் முயற்சியில் விதிவிலக்கின்றி சகல மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டிய மதிப்பு, ஏற்கெனவே

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# திருக்குடும்பசபை மாகாணத்தலைவியின் ஆசியுரை

காலத்தின் அறிகுறிகளுக்கும் அழைப்புக்களுக்குமேற்பத் தம் வாழ்வையும், பணியையும், மீளாய்வு செய்து, உருக்குலைந்தவற்றிற்கு உருவம் கொடுக்கவும், காலத்திற்கொவ்வாதன களைந்து, காத்திரமானவற்றிற்குச் கணிசம் கொடுக்கவும், காலநீரோட்டத்திற் கலந்து, உயிராற்றல்மிக்க, அர்த்தமுள்ள அமலமரித்தியாகிகளாகத் தம்மை உருமாற்றிக்கொள்ளவும் உறுதிபூண்ட, அ. ம, தியாகிகளின் பெருமுயற்சியைப் பாராட்டுகின்றோம்! மாநாடு அதன் இலட்சிய நோக்கிலும் போக்கிலும் இனிதே முன்னேறவும், புதிய பல திசைகளையும் திருப்பங்களையும் கண்டு, வெற்றிகரமாய் நிறைவெய்தவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்! வாழ்த்துகின்றோம்! ஆயர்களாக, குருக்களாக, அருட்சகோதரர்களாக இம்மண்ணில்பதிந்த 144வருடபாத சுவடுகளை நன்றிப்பெருக்கோடு உற்று நோக்குகின்றோம்! அ.ம.தியாகிகளின் கடின உழைப்பிலும், தியாக சேவையிலும், ஆன்மவழிகாட்டலிலும், அறிவூட்டலிலும் எழுச்சியுற்று வளமுற வளர்ந்த யாழ். மறைவட்டத்தின் இன்றைய உயர்நிலையை எண்ணி, உளமாரப்போற்றி, இறைபுகழ் கூறுகின்றோம்.

அருட்செல்வி மாறி யோசவ்
மாகாணத் தலைவி.
மாகாண இல்லம்
யாழ்ப்பாணம்

# புதுக்குடியிருப்பில் வரவேற்பு வைபவம்

புதுக்குடியிருப்பு பங்கைச் சேர்ந்தவரும் நல்லாயன் சபையைச் சேர்ந்தவருமாகிய அருட்சகோதரி மா. புனிதராணி அவர்கள் கடந்த மார்கழி 10ஆம் நாள் நித்திய வாக்குத்தத்தம் பெற்றார். இவருக்கு பங்கின் பொதுநிலையினர் கழகத்தினரால் கடந்த சித்திரை மாதம் 20ஆம் திகதி அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நன்றித்திருப்பலியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து வரவேற்பு வைபவமும் கலை நிகழ்ச்சி

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# திருச்சிலுவைக் கன்னியர்சபை மாகாணத் தலைவியின் ஆசிச்செய்தி

அமலமரித்தியாகிகள் மாநாட்டிற்கு நம் நல்லாசிகள்!

அமதிகள் ஆற்றும் அருஞ்சேவைகளோ அளப்பல. அண்ணல் யேசுவின் அடிகளைப் பின்பற்றி, "சிறைப்பட்டோர் விடுதலையடைய, எளியோர்க்குநற்செய்தி அறிவிக்க, ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்க, ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்க (லூக். 4/18,19) அனுப்பப்பட்டவர்கள் அவர்கள். இன்று தமிழ் அன்னையின் புதல்வர் படும் தாங்கொணாத் துயரில் கை கொடுத்துதவி, நீங்காத நோய் நொடியால் உடல் உளம் நலிந்து துயருறுவோருக்கு நல்லாறுதல் கூறி, சீர்கெட்ட சிறை வாழ்வில் சிந்தை கலங்கி நிற்போரை திடப்படுத்தி கவலைப்படுவோரின் கண்ணீர் துடைக்கும் ஆறுதற் கரமாய், அமதிகள் அமைந்துள்ளனர் என்றால் மிகையாகாது. "யாதும் ஊரே, யாவரும் கேளீர்" என்பதற்கொப்ப, அவர் சேவை எவர்க்கும் பொது என்பது அவர்கள் அன்றாட வாழ்வின் மைல் கற்கள். பல இன சன சமய மக்கள் சூழலிலும், பொதுவாழ்வுச் சமுதாயங்களிலும் சமாதான சக்தியாக விளங்குகின்றனர்.

இன்று நம் நாட்டின் நலிந்த நிலையில், ஆறுதல் தேடும் அன்னையானாலும் சரி, கற்பைப் பறிகொடுத்த கன்னியானாலும் சரி, வாழ்வற்ற வாலிபன் ஆனாலும் சரி, சீர்குலைந்த குடும்பமானாலும்சரி, பெற்றோரை இழந்த சேயராலும் சரி, நாடற்ற வீடற்ற அகதியானாலும் சரி அனைவருக்கும் புகலிடம் தேடி புனர்வாழ்வழிப்பதே தம் தலையாய கடன் என எண்ணி சேவையாற்றுபவர் இவர்களே.

எம் சபையினரின் எத்தகைய சேவையிலும் இவர்களின் பிணைப்பு இல்லையென்று கூறமுடியாது. பயிற்சித் துறையிலோ, பராமரிப்பு இல்லத்திலோ, வைத்தியசாலையிலோ, எம் தேவைகளிலெல்லாம் தோளோடு தோள் தந்து உதவிய தியாகிகள் இவர்கள். எனவே, இவர் தம் சேவை ஆகாயத்து அருந்தாரகைகள் போல், கடற்கரை மணலின் துணிக்கைகள் போல் பலுகிப் பெருகி பலரும் பயன் பெற எம் மனநிறை நல்லாசிகள்.

வாழ்க அவர் சேவை
வளர்க அவர் சபை
மாகாணத் தலைவி
திருச்சிலுவைக் கன்னியர்மடம்
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

# என் இதயமே வாராயோ....?

ஆவியே இறைவா அருட்சுனையே எழுந்து வாராயோ...
பாவியின் தயவே புவியிருள் அகற்றி ஒளிராயோ...?
ஊன மனிதனுக்கு உன் வானக நிறைவினைத் தாராயோ...
மாயைகள் ஒழிந்திட ஞான தாகம் தீராயோ...?

பூவிதழ் மலர இதயம் பொங்கிவழிந்திட ஊற்றாயோ
பூமகள் சிறக்க புதுமைகள் பிறக்க உள்ளுயிராகாயோ?
அசுத்தங்கள் அகல சுத்தங்கள் மலர புனிதம் பரப்பாயோ?
புசித்திடும் தேனாய் பூமியின் மக்கள் புத்தியை நிரப்பாயோ?

சோர்ந்திடும் மனித நாண்கள் எல்லாம் மகிழ்வுறலாகாதோ
அலைந்திடும் எமது ஆவிகள் உன்னை அணைத்திடலாகாதோ?
புனிதரின் சிந்தனை எம்மில் பூவாய் மலர இதயத்தில்
வாழாயோ

அழகிய கலைகளில் இறையினை அறிய அன்பினை ஊதாயோ?

புண்ணியப் பூக்கள் பூமியில் மலர புத்தொளி ஊட்டாயோ
கண்ணிய வாழ்வை மண்ணினர் மேவ இதயந்தைக்
கழுவாயோ?

அண்ணலின் அடியை அனைவரும் தொடர வழியாய்
ஆகாயோ

மண்ணினை விட்டு விண்ணினை நாட மனதினில் பூசாயோ?

ஞானக் கதிரவன் உதித்தெழ மக்கள் இதயத்தைத்
திறவாயோ?

ஊனக் கனவுகள் ஒழிந்திட வானக் கனவுகள் காட்டாயோ?
தானம் செய்யும் ஞானம் பெறவே அன்பினை உருக்காயோ
வானக அன்பு பூமியில் மலர்ந்திட பூங்கதிர் சொரியாயோ?

போட்டியும் பூசலும் ஞானக் கொடையால் அழிந்திட
அருளாயோ?

மேட்டிமை மானிடர் ஆணவமழிந்திட தயவாய் மாற்றாயோ?
ஊற்றிடும் வெறியை அகற்றிட வேண்டி, புத்தியைத்
திறவாயோ

நாற்றச் செயல்களை விட்டுவிலகிட நீதியை அளிக்காயோ?

திருச்சபை என்னும் திருவிருட்சத்தை காத்து வளர்த்தருள்
புரியாயோ

திருத்தந்தையர் ஆயர் குருத்துவ ஆட்சியில் ஆளாயோ?
தரித்திரம் தரித்து, வான்வளம் வளர்க்கும் துறவினை
எழுப்பாயோ

திருச்சபை முழுவதும் திவ்வியம் பெருகிட தைலம்
பொழியாயோ?

அருட்செல்வர் தே. விமலதாசன் CR.

# காவலன் கண்மணிகள்

| ஒளி : 6<br>சுடர்: 8 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

**என்னகம் :**

அன்புக்கினிய கண்மணிகாள் !

உயிர்த்த இயேசுவின் உன்னத வாழ்த்துக்கள் என்றும் உங்களுடன் இருப்பதாக!

ஓய்வு இல்லை என அங்கலாய்க்கும் அருமைக் கண்மணிகாள், படிக்கும் பொழுதும், வேலைசெய்யும் பொழுதும் ஓய்வு பெற சில உத்திகளைக் கூறுகிறேன் கவனியுங்கள்.

ஓய்வு என்றால் சோம்பியிருத்தல், சும்மா இருத்தல், உறங்குதல், அலைந்து திரிதல் என்று சிலர் நினைக்கக்கூடும்.

ஓய்வு என்பது உழைக்கும் உறுப்புகளுக்குக் களைப்பாற நேரம் கொடுப்பதாகும்.

நீங்கள் கற்கும் பாடங்கள் ஒவ்வொன்றும் தமக்குள் தொடர்புடையனவாக இருந்தாலும் செயல்பாடுகளில் மாற்றம் கொண்டனவாக உள்ளன. அவைகள் உங்கள் உறுப்புகளுக்கு உழைப்பைக் கொடுக்கின்றன. அதனால் நீங்கள் களைப்படையக்கூடும். கல்விக்கூட நேர அட்டவணைகள் உங்களுக்குக் களைப்பைத் தராதவகையில்தான் அமைக்கப்படுகின்றன. முதலில் உங்கள் நேர அட்டவணையைப் புரிந்து கொள்ளுங்கள். அதனுடன் இசைவாக்கம் செய்துகொள்ளுங்கள்.

தொடர்ந்து ஒரு செயலைச் செய்யாமல் செயலை மாற்றும்பொழுது ஓய்வு கிடைக்கும். வீட்டில் பின்வரும் செயல் திட்டங்களை உருவாக்கி வீட்டில் ஓய்வினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

1) காலையில் நேரத்துடன் துயில் எழுங்கள். இறை வணக்கம், பெற்றோர் வணக்கம், காலைக் கடமைகளைத் திட்டமிட்டுச் செய்யுங்கள்.
2) இரவில் அடுத்த நாளுக்குத் தேவையான உபகரணங்களை ஒழுங்குபடுத்துங்கள்.
3) வெளிக்களப் பயிற்சி கோவைகள் ஆக்குதல்:
   i) பாடத் தேவைகள்
   ii) குடும்பப் படம் சேர்ப்பு
   iii) முத்திரை சேகரிப்பு
   iv) உள்ளத்தில் உறைந்தோர் நிழல்படம், ஓவியம்
   v) கட்டுரை நொடிகள் சேகரிப்பு
4) தோட்ட வேலை, கைப்பணி, ஓவியம்
5) விளையாட்டு

எல்லா நேரமும் ஓய்வு நேரம்தான்
எல்லா நேரமும் வேலை நேரம்தான்

என்று செயலாற்ற உங்களை நெறிப்படுத்துங்கள்.

பெற்றோர் துணையுடன் ஓய்வை ஆக்கமாக்க பால யேசுவின் அருள் வேண்டும்.

அன்பின் அன்புவிழி

## சிந்தனைக்கு மருந்தும் விருந்தும்

ஒவ்வொருநாளும் தாயும் மகளும் காலையும் மாலையும் செபிப்பார்கள்.

ஒருநாள் அதிக வேலை காரணமாக, அன்னை செபத்துக்கு வரத் தாமதித்தாள்.

"அம்மா செபத்துக்கு கெதியாக வாங்கோ", என மகள் அழைத்தாள்.

"இன்று அப்பாவுடன் செபி" என அன்னை சற்றுக் கோபத்துடன் மொழிந்தாள்.

"அப்பாவா செபிக்க வேண்டும்? அப்பாவுக்குச் செபிக்கத் தெரியாதே" எனச் சிறுமி பட்டென பதிலளித்தாள்.

தன் அருமை மகளின் கபடமற்ற சொற்களைக் கேட்ட தந்தை.........

(அடுத்த சுடரில் தொடரும்)

## நல்வழி நம்வழி

ஓய்வு நேரம் :

1) அலைந்து திரியாது, இறைவனின் இலவசக் கொடையாம் நேரத்தை மதித்து வாழ்வோம்.
2) பொறுப்பற்றுச் சோம்பியிராது பொறுப்புடன் பணியாற்றுவோம்.
3) தோட்ட வேலை, கைவேலையில் நாட்டம்கொள்வோம்.
4) விளையாட்டுப் பயிற்சியால் உடல், உள சுகம் பெறுவோம்.

யார் இவர் :

அலெக்சாந்திரியாவில் பிறந்தவர். வனவாசியான புனித அந்தோனியாருடன் பல ஆண்டுகள் வனாந்தரத்தில் வாழ்ந்தவர்.

"இயேசு மெய்யான கடவுளாக இருக்கமுடியாது, அவரும் நம்மைப் போன்ற ஒரு மனிதரே" என்று போதித்த ஆரியுள் தப்பறைக்குச் சாட்டையாகவும் கீழை நாடுகளின் சத்தியத் தூணாகவும் விளங்கினார்.

கி. பி. 325இல் கூடிய நிசெயா பொதுச்சங்கத் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் அஞ்சா நெஞ்சம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

தமது சொந்த ஊரில் ஆயராக இருந்த காலத்தில் தப்பறையைப் போதித்தவர்களால் தாக்கப்பட்டார், நாடுகடத்தப்பட்டார். தம் சொந்த நாட்டிற்குத் திரும்பிவந்த சில ஆண்டுகளில் இறைவனடி சேர்ந்தார்.

# 26வது உலக தொடர்பு....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறை பொருளாக ஒவ்வொரு மனித உள்ளத்திலும் நிகழும் பரிசுத்த ஆவியின் செயற்பாட்டுக்கு மதிப்பு. (மீட்பரின் பணி 29)

கிறிஸ்து தமது போதனையை யார் மேலும் திணிக்கவில்லை என்பதை அறிவோம். அவர் விதிவிலக்கின்றி அனைவருக்கும் அதை அளித்தார். ஆனால் தமது அழைப்பை ஏற்பதில் ஒவ்வொருவருக்கும் சுதந்திரத்தை அளித்தார். அவரது சீடராகிய நாம் பின்பற்ற வேண்டிய பாங்கும் இதுவே. அவர் எமக்கு விட்டுச்சென்ற மீட்புச் செய்தியைக் கேட்பதற்கு சகல மக்களுக்கும் உரிமை உண்டு என்பதும், அவர்களுக்கு அது உண்மையென்று பட்டால் அதை ஏற்றுக் கொள்ளும் உரிமை உண்டு என்பதும் எமது நிலைப்பாடாகும். கிறிஸ்துவின் செய்தியை அனைவருக்கும் அளிப்பதையிட்டு நாம் சமாதானம் கூறவேண்டும் என்ற உணர்வை விடுத்து, இதைச் செய்வது எமது உரிமையும் கடமையுமாகும். கிறிஸ்துவின் செய்தியை அனைவருக்கும் அளிப்பதற்கு வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்ற உணர்வுக்குப் பதிலாக, அவ்வாறு செய்வது எமது உரிமையும் கடமையுமாகும் என்பதை உறுதியுடன் வலியுறுத்துகிறோம்.

இதனோடு கூட, எமது காலத்திற்கே உரியனவாக விளங்கும் புதிய தொடர்பு சாதனங்களை இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் உரிமையும் கடமையும் உண்டு. உண்மையில், ''மனித ஆற்றலினால் இடையறாது விருத்திசெய்யப்பட்டு நிறைவுள்ளதாக்கப்படும் சக்திவாய்ந்த கருவிகளை பயன்படுத்தத் தவறினால் திருச்சபை இறைவன்முன் தான் குற்றமிழைத்தாக உணரும்.''

இந்த சக்திவாய்ந்த கருவிகளை பயன்படுத்துவோருக்கு அதற்குரிய விசேட திறன்களும், பயிற்சியும் தேவை என்பது தெளிவாக உணரப்படுகின்றது. ஆகவே இப் ''புதிய மொழிகளில்'' புரியத்தக்கவிதமாகப் பிறரோடு தொடர்பு கொள்வதற்கு விசேட திறன்களும், அதற்கேற்ற பயிற்சியும் தேவைப்படுகிறது.

இது தொடர்பாக, இந்த உலக தொடர்பு சாதனத் தினத்தன்று, தனியாகவும் எண்ணற்ற நிறுவனங்கள் இயக்கங்கள் வழியாகவும் கத்தோலிக்கர் இத்துறையில் ஆற்றிவரும் செயற்பாடுகளை நினைப்பூட்ட விருக்கிறேன். குறிப்பாக மூன்று பெரிய கத்தோலிக்க தொடர்பு நிறுவனங்களை — அதாவது திரைப்படம் சினிமா ஆகியவற்றுக்கான சர்வதேச கத்தோலிக்க அலுவலகம், சர்வதேச கத்தோலிக்க அச்சுத்துறை ஒன்றியம், வானொலி-தொலைக்காட்சிக்கான சர்வதேச கத்தோலிக்க சங்கம் — என்பவற்றை குறிப்பிடுகிறேன் — திருச்சபையானது கிறிஸ்துவின் செய்தியை, உலகெங்கும் தொடர்பு சாதனங்களினால் ஒரு நாகரிக நிலையில் உள்ள மக்களுக்கு புரியக்கூடிய விதத்தில் தனக்கு கிடைத்துள்ள கருவிகளின் தன்மைக்கேற்ற வடிவத்தில் பரப்ப முயலுகிறது. இதற்கு மேற்கூறிய நிறுவனங்களினதும், அவற்றின் சர்வதேச அங்கத்துவத்தினுள் காணப்படும் தொழிற்றுறை அறிவு, திறன், ஆர்வம் ஆகிய மூலவளங்களினதும் துணையை நம்பிக்கையுடனும், பற்றுறுதியுடனும் வேண்டி நிற்கின்றது. இந்த விசேட தினத்தில், தம்மீது எத்தகைய பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளதுஎன்பதுஇருபாலாரான கத்தோலிக்க பொது நிலைத் தொழிற்றுறை அறிஞர்களுக்கு நினைவூட்டப்பட வேண்டும். ஆனால் அதேவேளையில் முழு விசுவாசிகள் கூட்டத்தினதும் ஆன்மீக ஆதரவும், உறுதியான கூட்டொருமைப்பாடும் அவர்களுக்கு உண்டு என்பது உணர்த்தப்படவேண்டும். தொடர்பு சாதனங்களின் மூலம் செய்தியைப் பரப்பவும், அவ்வாறு செய்வதற்குப் பிறருக்குப் பயிற்சியளிக்கவும் இன்னும் அதிகமான, உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவர்களை ஊக்குவிக்க விரும்புகிறேன். தொடர்பு சாதனங்களில் திருட்சபையின் பிரசன்னத்தைப் பேணுமாறும் சம்பந்தப்பட்ட கத்தோலிக்க முகவர்களிடையே கூடிய ஒருங்கிசைவுக்காக உழைக்குமாறும் சகல கத்தோலிக்க நிறுவனங்களையும், துறவற சபைகளையும், திருச்சபை இயக்கங்களையும், விசேடவிதமாக தேசிய, பிராந்திய ஆயர் பேரவைகளையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தனது பணியை நிறைவேற்றுகையில் பரந்த செயல்விளைவுடையதாகவும், கூடிய பயனளிப்பதாகவும் திருச்சபை சமூக தொடர்பு சாதனங்களைக் கையாள வேண்டியுள்ளது.

உலக தொடர்பு சாதனங்களில் ஈடுபட்டு தம்மிடம் இறைவன் வேண்டும் வேலைகளுக்கு தம்மை மீண்டும் அர்ப்பணிப்பவர்களுக்கு அவரே பலமும் ஆதாரமுமாக இருப்பாராக. அவரது தெய்வீக பிரசன்னத்துக்கும் அவர்களது முயற்சிக்கு அவரது சர்வசக்திவாய்ந்த துணைக்கும் அடையாளமாக நான் மகிழ்ச்சியுடன் எனது அப்போஸ்தலிக்க ஆசியை அளிக்கிறேன்.

(1992 ஜனவரி 24-ம் திகதி, புனித பிரான்ஸிஸ் டி சேல்ஸ் திருநாளன்று வத்திக்கானில் வெளியிடப்பட்டது.)

திருத்தந்தை
2ஆம் அருள் சின்னப்பர்

# யாழ் அமதிகள் மாநாடு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஏனைய துறவறசபையின் தலைவர்கள், தலைவிகள், அவர்களின் பிரதிநிதிகள், யாழ் நகரிலுள்ள ஏனைய கிறிஸ்தவ சபைகளின் பிரதிநிதிகள், இந்து சமயப் பிரதிநிதியாகிய நல்லை ஆதினத்தைச் சேர்ந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். அத்துடன் அமதிகளின் யாழ். மாநிலத்தின் தாய் மாநிலமாக விளங்கும் இலங்கை மாகாணத் தலைவர் அருட்திரு. ஜோண் கமிலஸ் அடிகளாரும் சமுகமளித்து முழு மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டு அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய அருட்திரு.S.M.செல்வரட்ணம் அடிகளார். அமலமரித்தியாகிகள் தங்கள் சபையின் எதிர் காலத்தை நோக்குங்கால், தம் பழைய உருவைக் களைந்து ஒரு புதிய உருவைத் தேட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார். இன்று யாழ். மன்னார் மறைவட்டத் திருச்சபைகள் வளர்ந்து முதிர்ச்சியடைந்துள்ள நிலையில் இருப்பதால், அமதிகள், மறைவட்ட அமைப்புகளை விட்டு விலகி நின்று, தமக்கென ஒரு உருவை அமைத்துக் கொள்வதன் வழியாக, தமது சபையை இம் மாநிலத்தில் மீளத் தாபிக்க வேண்டியுள்ளது என்றார்.

இம் மாநாட்டுக்கென, அமதிகள் சபை சிரேஷ்ட அதிபரின் பிரதிநிதியாக வருகை தந்த அருட்திரு ஜிம் பிறஸ்பற்றிக் அடிகளார் மாநாட்டு நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். மாநாட்டின் முதல் நாட்களின் போது அமதிகள் தம் வாழ்வு, பணி பற்றி விரிவாக ஆராய்ந்து எதிர்வரும் ஆண்டுகளில் அவை அமைய இருக்கும் வடிவை தம் ''பணி—பார்வை—கூற்று'' (Mision - Vision Statement) ஆக வெளியிட்டனர். இதில் அமதிகள், இன்றைய போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உழைக்க தம்மை அர்ப்பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கூற்று அனைத்து அங்கத்தவர்களாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறுதி நாட் திருப்பலியின் பொது இதனைத் தமதுவாழ்விலும் பணியிலும் செயற்படுத்த அமதிகள் உறுதி அளித்தனர். மாநாட்டின் ஆய்வுக்கெனத் தயாரிக்கப்பட்ட, 'தொடர் உருவாக்கம்', 'சிறப்புப் பணிகள்', மறை போதகப் பணி, 'குழு வாழ்வு' பற்றிய ஆவணங்களும் ஆராயப்பட்டு பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன,

இம் மாநாடு யாழ் அமதிகளின் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை எற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அமதிகள் ஒரே உள்ளமும் ஒரே மனமும் கொண்டவர்களாய் வருங்காலத்தில் தம் துறவற வாழ்வையும் அப்போஸ்தலிக்க பணியையும் துணிவுடன் எதிர்கொள்ள உறுதி பூண்டுள்ளனர். இறுதி நாட் திருப்பலி, இவ்வாண்டு தம் துறவற வாழ்வின் வெள்ளி விழாக்காணும் அருட்திரு அல்பன் இராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. அமதிகள் தம் சபையின் தாபகராம் முத்திப் பேறுபெற்ற இயூஜின் டி மசனெட் அவர்களின் திருவிழாவையும் கொண்டாடினர். இத் திருப்பலியின்போது மறையுரையாற்றிய அருட்திரு பிறஸ் பற்றிக் அடிகளார். அமதிகள் சபையின் தனி அருங்கொடையையும் தாபகரான ஆயர்டி மசனெட்டின் இலட்சியத்தையும், யாழ். மாநில அமதிகளின் அப்போஸ்தலிக்க ஆர்வத்தையும் வலியுறுத்தினார். இறுதியில் யாழ் அமதிகள் தமது முதல்வர் அருட்திரு பி. பி. பிலிப் பர்ணாந்து அடிகள் முன்னிலையில் தமது துறவற வார்த்தைப்பாடுகளைப் புதுப்பித்து, தம்மை இறைவனுக்கும் அவரது பணிக்கும் மீள அர்ப்பணித்தனர்.

தம் மாநாடு முடிவடைந்திருக்கும் இவ்வேளையில் மாநாடு சிறப்பாக நடந்தேற பல வழிகளில் ஒத்துழைத்த அனைவருக்கும் அமதிகள் நன்றி நவில்கின்றனர். தம் கேள்விப்பத்திரங்களுக்கு விடையெழுதி தம் கருத்துக்களை ஆலோசனைகளை அளித்த குருக்கள், அருட்செல்விகள், பொதுநிலையினருக்கும், சிறப்பாக இம்மாநாட்டுக்காக இடையறாது செபித்து உதவிய துறவறக் குழுக்களுக்கும் அமதிகள் நன்றி கூறுகின்றார்கள். மேலும் இம்மாநாட்டை ஒட்டிய கட்டுரைகளைப் பிரசுரித்து, குறிப்பாக இதற்கென ஒரு சிறப்பிதழையும் வெளியிட்ட காவலன் ஆசிரியருக்கும் அவரின் உடன் உழைப்பாளருக்கும் அமதிகளின் விசேட நன்றிகள்.

# பிரச்சினை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ச்சியும் குறைவு. வறிய இம் மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்கருட் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்டோரும் பூர்வகுடிகளுமாவர். அத்துடன் இவ்விடயம் நக்சலைட் தீவிரவாதிகளின் கோட்டையாகவும் இருக்கின்றது. ஆனால் தாம் நக்சலைட்டுகளிடமிருந்து எவ்வித பிரச்சினையையும் எதிர் பார்க்கவில்லை என ஆயர் மாரம்பூதி கூறியுள்ளார்.

ஆறு மாதங்கள் வரை தமது மறைமாவட்டத்தைப் பார்வையிட்ட பின் அரசாங்க சமூகநல அதிகாரிகளின் உதவியுடன் சில அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாமென அவர் கருதுகிறார்.

## விண்ணக வாழ்வின் 1ஆம் ஆண்டு நினைவு



திருமதி யோசேப் திரேசம்மா
(நேசராசம்)

மலர்வு 10-07-1915 உதிர்வு 08-06-1991

ஆண்டு இரண்டு மறையு முன்னே, தந்தையற்ற சோகம் எம்மை விட்டு நீங்குமுன்னே தியாகமுடன் நிறைவளித்த அன்னையையும் அழைத்தனையே! எம் உள்ளத்தில் அணையாத தீபங்கள் வான் வீட்டில் அமைதிபெற உருக்கமுடன் இறைவனையே வேண்டுகிறோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக எம்மோடுசேர்ந்து பிரார்த்திக்க உங்களை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

நாவாந்துறை A/14/92

# புதுக்குடியிருப்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் இடம்பெற்றன. துறவிகள் திருச்சபையினூடாக உலகிற்கு அழகைக் கொடுப்பவர்களென தனது மறையுரையில் அருட்திரு ஸ்ரலின் அடிகளார் குறிப்பிட்டார்.

புதுக்குடியிருப்புப் பங்கின் எல்லா ஆலயங்களைச் சேர்ந்த மக்களும் எவ்வித வேறுபாடுமின்றி இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தார்கள். மாத்தளன் அடைக்கல அன்னை ஆலய மூப்பர் திரு. யோ. மாற்குப்பிள்ளை அவர்களின் புதல்வியான இவர் சில காலங்களுக்கு முன்னர் அனுரதபுரத்தில் இன வெறியினரின் வாள்வெட்டுக்கு இலக்காகி மயிரிழையில் உயிர்தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. திருச்சிலுவை கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரி செபா இவருடைய இளைய சகோதரி ஆவார்.

## விண்ணக வாழ்வின் 3ஆம் ஆண்டு நினைவு



திரு. பீற்றர் யோசேப்
(செல்வநாயகம்)

மலர்வு:- 07-12-1912
உதிர்வு:- 13-05-1989

ஆண்டு மூன்று மறைந்தாலும் எம் உள்ளத்தில் அணையாத தீபமாக விளங்கிடும், அன்புத்தந்தையே, உம் வான்வீட்டு வாழ்வு, அமைதியுற இரக்கமுடன் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக எம்மோடு சேர்ந்து பிரார்த்திக்குமாறு உங்களை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

நாவாந்துறை A/15/92

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**